விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 111 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 26 புதன்கிழமை (09.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## எமது விருப்பமின்றி
# பயங்கரவாதச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது
## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

எமது விருப்பமின்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகின்றது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில்
## அனுமதியின்றி மாடுகளை ஏற்றிச் சென்ற மூவர் கைது

(வவுனியா)

வவுனியா, பூவரசன் குளம் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் 15


### போதைப்பொருளுடன்
## உடுத்துறையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியில் ஒரு தொகை போதைப்பொருளுடன் நேற்று அதிகாலை ஒருவர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிலைக் கேணி கடற்படை 15

## சி.ஐ.டியால் பிள்ளையான் கைது



(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்சி தலைமைக் காரியாலயத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வருகை 15

### மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின்
## கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள யாழ்.வந்த தருமபுரம் ஆதீனம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் தருமபுரம் ஆதீன குரு மகா சந்நிதானம் மாசிலா 15



### தேசபந்து தென்னகோனை
## பதவி நீக்குவதற்கான விசாரணைக்குழு
### சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்குவது தொடர்பாக விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணை 157 வாக்குகளால் நேற்று 15

## அரசின் ஏமாற்று நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் பெரும் விரக்தியில்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(புத்தளம்)

அரசாங்கத்தின் பொய்கள் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் பெரும் விரக்தியில் உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரவித்துள்ளார்.

புத்தளம் நகரில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 02



## அரசாங்கம் யாரையும் பாதுகாக்கவில்லை
### அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

அரசாங்கம் யாரையும் பாதுகாக்க முயற்சிக்கவில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு உரையாற் 15

## வடக்கு மாகாணத்துக்கு தொடர்ச்சியாக ஆதரவு
### ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி, வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் 15

### அர்ஜுன மகேந்திரனை
## நாட்டுக்கு அழைத்துவர அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)



முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் முயற்சி செய்வதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களிடம் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முறையான பொருளாதார வேலைத் திட்டம் இன்மையால் நாடு பொருளாதார அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய நிலைவரப்படி எரிபொருள் மற்றும் எண்ணெய் மானியங்கள் வழங்கப்படவில்லை.

உர மானியமும் வழங்கப்படவில்லை. அரசாங்கம் இந்த வரிக் கொள்கை தொடர்பில் சரியான நிலைப்பாட்டில் இல்லை. அரசாங்கம் உறக்கத்தில் முட்டாள்தனமாகப் பேசி வருகிறது.

இவ்வாறே போனால் நாடு பொருளாதார ரீதியாகப் பெரும் ஆபத்தில் விழும். இந்த பாரதூரமான பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுக் குழுவை நியமிக்க வேண்டும்.

உடனடியாக நடவடிக்கைகளை எடுத்து ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைக்கு இயன்றளவில் சென்றிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. 2028 ஆம் ஆண்டுக்கான கடனை செலுத்துவதிலும் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார். (ம-7,4)

## வடக்கு, கிழக்கில் சுட்டெரிக்கும் சூரியன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று அதிக உஷ்ணமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அதிகம் கவனம் செலுத்துமாறும் போதியளவு நீரினை பருகுமாறும் அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,4)


# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கட்டுநாயக்க சீதுவ - 18 ஆவது மைல் கம்பம் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

51 வயதுடைய தொழிலதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. வைகுந்தநாதன் காகுந்தன்
B.F.A(Hons), PGDE



திருமதி முரளி சித்திரகலா
B.F.A, PGDE



திரு. பாலசிங்கம் சாந்தரூபன் BA



திருமதி சுகிர்தா சிவயோகன் BA

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற ஆசிரிய உறவுகளை மேலும் பல உயர்வுகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

(3894)

வாழ்த்துவோர்: ஆசிரிய நலன்புரிச் சங்கம் யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் பணியாளராகக் கடமையாற்றும் திரு. அருளம்பலம் அருள்சோதி அவர்களின் அன்புத் தாயார்



அமரர் அருளம்பலம் மலர்ச்சோதி


அவர்கள் 04.04.2025 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 14.03.1940 இறப்பு 04.04.2025

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி

(3896)

# மரண அறிவித்தல்



மலர்வு 04.07.1950 உதிர்வு 07.04.2025

## கதிரவேலு கணேசபிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கணேசபிள்ளை அவர்கள் (07.04.2025) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் பிறேமினா, டில்சன், கயமுகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவகெங்கை, பரமநாதன், பத்மநாதன் மற்றும் கந்தசாமி ஆகியோரின் சகோதரரும் நவரட்ணராஜா, சிறிஸ்காந்தராஜா, காலஞ்சென்ற நிர்மலாவதி மற்றும் சற்குணராஜா, இரத்தினராஜா, அனுசியாவதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கமல்ராஜ் மற்றும் நர்மதா, ஐரனியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அதியா, அதிஸ், சுவினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2025) வியாழக்கிழமை சுவிஸ் நாட்டில் Krematorium Liebenfels Zurcherstrasse 108 5400 Baden Switzerland எனும் முகவரியில் கிரியைகள் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகன்கள் - 0033 7459 20215
- 0033 7636 26091
மைத்துனர் - 0094 7687 73645

தகவல்: குடும்பத்தினர்

(1008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் வரி விதிப்பு
# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும்
## நாணய பரிமாற்றுத்துறையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி அமுலாக்கம் காரணமாக, இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டிருப்பதாக நாணய பரிமாற்றுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.**

இலங்கைக்கு டொனால்ட் ட்ரம்ப் 44 சதவீத பரஸ்பர தீர்வை வரியைக் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதியாகும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை 88 சதவீத தீர்வை வரியை அறவிடுகின்ற நிலையில், கழிவளிக்கப்பட்ட பெறுமதியாக 44 சதவீத தீர்வை வரியை இலங்கை மீது விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவுடன் இந்த விடயத்தில் இலங்கை சரியான பேச்சு வார்த்தைகளை நடத்தாவிட்டால், இலங்கை ரூபாவுக்கு மிகப் பெரிய அழுத்தம் ஏற்பட்டு அதன் பெறுமதி மிகப்பெரிய அளவில் குறையக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா போன்று அல்லாது, இலங்கையின் வர்த்தக இடைவெளி அதிக விரிசலுடன் இருப்பதன் காரணமாக, நாட்டுக்கு டொலரின் உள்வருகை கணிசமாகக் குறைவடையும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா விதித்துள்ள புதிய பரஸ்பர தீர்வை வரியைக் குறைத்துக் கொள்வதற்கான யோசனைத் திட்டம் ஒன்று இலங்கை அரசாங்கத்தின் சார்பில் முன்வைக்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு, அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதிகளை இணைய வழியில் சந்தித்துக் கலந்துரையாடி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பிரதிநிதிகளால் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் இந்த யோசனைத்திட்டம் தயாரிக்கப்படுவதாகவும், இலங்கையின் இறக்குமதி வரி கட்டமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இந்த யோசனைத் திட்டம் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

1978 முதல்
ஈசன்ஸ்
இல.148,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
021 222 2695
077 429 0613

# சட்டத்திற்கமைய செயற்பட்டிருந்தால் தேர்தலை நிறைவு செய்திருக்க முடியும்
## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு உரிய முறையில் செயற்பட்டிருந்தால் முன்னதாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி நிறைவு செய்திருக்க முடியும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டிற்கு முன்பே தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்திருந்தோம்.

பாதீட்டுத் திட்டம் மீதான விவாதம் இடம்பெறுவதனால் தேர்தலை பிற்போடுமாறு எதிர்க்கட்சியினர் கோரியிருந்தனர்.

இதன்படி, மார்ச் மாதம் 21ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதியை அறிவித்தது.

அதற்கமைய தேர்தல் மே மாதம் நடத்தப்படவுள்ளது.

எனவே, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு அமைய, உரிய முறையில் தேர்தல்கள் ஆணைக்குழு திகதியைத் தீர்மானித்திருந்தால் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும்.

தொடர்ந்தும் தேர்தலை நடத்திக் கொண்டிருப்பதற்கு நேரத்தைச் செலவிட முடியாது.

எனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்கு அமைய இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் பாரிய வேலைத் திட்டங்களைச் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.



எனினும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் வெவ்வேறு நிபந்தனைகள் காரணமாக எம்மால் பணியாற்ற முடியாமல் உள்ளது.

8 இலட்சம் குடும்பங்களுக்கு மானிய விலையில் நிவாரணப் பொதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், தேர்தல்கள் ஆணைக்குழு அதனையும் தடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-8)


## உ/த பரீட்சை பெறுபேறுகள் புத்தாண்டிற்குப் பின்

(கொழும்பு)

2024 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏப்ரல் புத்தாண்டிற்குப் பின்னர் வெளியிடப்படும் என்று இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள் குறித்து ஊடகங்கள் வினவியபோது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். (நி-8)

# தமிழ்நாடு ஆளுநர் விருது பெற்ற ஈழத்து தமிழ் ஆளுமைகள்







(யாழ்ப்பாணம்)

இராம நவமியை ஒட்டி தமிழக ஆளுநரின் இலக்கிய ஆளுமைகளுக்கான விருது வழங்கும் விழா கடந்த 05.04.2025 சனிக்கிழமை சென்னை ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழ் சொற்பொழிவாளர்களான கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன், வவுனியா தமிழ்ச் சங்க தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதைவேளை கம்பராமாயண காவியத்தை மலையாள மொழியில் மொழிபெயர்ப்பு செய்து பதிப்பித்தமைக்காக மறவன் புலவு சச்சிதானந்தம் அவர்களும் ஆளுநரால் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் துறைசார்ந்த சொற்பொழிவாளர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது எங்க 'ஏரியா' ■■■■■■■■ சதமடித்து தூள் கிளப்பிய 'ஆரியா'

## சென்னையை வேட்டையாடி விருந்து வைத்த பஞ்சாப் சிங்கங்கள்



சென்னையை அடித்து துவைத்து ஆர்யா (103), ஷஷாங்க் சிங் (52*) விருந்து வைக்க பஞ்சாப் அணி 18 ஓட்டங்களால் வெற்றியை ருசித்தது.

பஞ்சாப், முல்லன்புர் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடந்த இந்தியன் பிரிமியர் லீக் போட்டியில் சென்னை அணி, பஞ்சாப்பை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**கலீல் நம்பிக்கை**

பஞ்சாப் அணிக்கு பிரியான்ஷ் ஆர்யா, பிரப்சிம்ரன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. கலீல் அகமது முதல் ஓவர் வீசினார். இதன் முதல் 5 பந்துகளில் ஆர்யா சிக்சர் அடிக்க 17 ஓட்டங்கள் கிடைத்தன. பிரப்சிம்ரன் "டக்" அவுட்டானார். மீண்டும் வந்த கலீல் அகமது, ஷ்ரேயஸ் (9), ஸ்டாய்னிசை (4) வெளியேற்றினார்.

**அஷ்வின் "இரண்டு"**

அடுத்து வந்த அஷ்வின் வீசிய முதல் ஓவரில் ஆர்யா, வதேரா தலா ஒரு சிக்சர் அடிக்க, 21 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. போட்டியின் 8ஆவது ஓவரை வீசிய அஷ்வின் இரட்டை அடி கொடுத்தார். 2ஆவது பந்தில் வதேராவை (9) அவுட்டாக்கிய இவர், கடைசிப் பந்தில் அபாயகரமாக மக்ஸ்வெல்லை (1), "கேட்ச்" செய்து அனுப்பினார்.

**ஆர்யா சதம்**

மறுபக்கம் பதிரன, ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் விளாசிய ஆர்யா, 39 பந்துகளில் சதம் கடந்தார். 42 பந்துகளில் 103 ஓட்டங்கள் (ஸ்டிரைக் ரேட் 245.23) எடுத்த ஆர்யா, நூர் அகமது சுழலில் சங்கரிடம் "பிடி" கொடுத்தார். ஷஷாங்க் கடைசிப் பந்தில் அரைச்சதம் எட்டினார்.

பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைக் குவித்தது.

ஷஷாங்க் (52), யான்சென் (34) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கான்வே ஆறுதல்**

கடின இலக்கைத் துரத்திய சென்னை அணிக்கு ரச்சின், கான்வே ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 61 ஓட்டங்கள் சேர்த்தபோது ரச்சின் (36) ஆட்டமிழந்தார். அணித்தலைவர் ருதுராஜ் (1) வந்த வேகத்தில் வெளியேறினார். ஷிவம் துபே சற்று வேகமாக ஓட்டங்கள் சேர்க்க பஞ்சாப் களத்தடுப்பாளர்கள் பல "பிடி" வாய்ப்புகளை நழுவவிட்டனர்.

சென்னை ஒரு கட்டத்தில் 13 ஓவரில் 120/2 ஓட்டங்களை எடுத்திருந்தது.

யான்சென் வீசிய 14வது ஓவரில் கான்வே, பவுண்டரி, சிக்சர் என விளாச துபே தன் பங்கிற்கு சிக்சர் அடித்தார். கான்வே 37ஆவது பந்தில் அரைச்சதம் எட்டினார்.

**தோனி "சிக்சர்"**

இந்நிலையில் பெர்குசன் பந்தில் துபே (42 ஓட்., 27 பந்து) போல்டாக சிக்கல் ஏற்பட்டது. பெரிய எதிர்பார்ப்புடன் 5ஆவது வீரராக களமிறங்கினார் தோனி.

பெர்குசன் வீசிய 18ஆவது ஓவரின் கடைசி இரு பந்தில் தோனி சிக்சர் அடிக்க இறுதி 12 பந்துகளில் சென்னையின் வெற்றிக்கு 43 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்நிலையில் கான்வே (69) "ரிட்டயர்ட் அவுட்" முறையில் வெளியேறினார். அர்ஷ்தீப் வீசிய 19ஆவது ஓவரில் தோனி, ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார்.

கடைசி ஓவரில் 28 ஓட்டங்கள் தேவைப்பட்டன. யாஷ் தாகூர் வீசிய முதல் பந்தில் தோனி (27) ஆட்டமிழக்க, சென்னையின் தோல்வி உறுதியானது. மறுபக்கம் ஜடேஜா சிக்சர் அடித்தபோதும், 9 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன.

20 ஓவர்கள் நிறைவில் சென்னை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை எடுத்து 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஜடேஜா (9), விஜய் சங்கர் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

(ம-7,4)


**புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 11.04.2025 நடைபெறவுள்ள நிலையில் இப் பொங்கல் விழாவின் போது பின்வரும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

- 11.04.2025 பொங்கல் விழாவின் போது ஒரு வழிப்பாதையூடான போக்குவரத்து அனுமதிக்கப்படும் ஆலயத்திற்குச் செல்வதற்கு புளியம்பொக்கணை வீதியும் வெளியேறுவதற்கு தருமபுரம் வீதி ஊடாகவும் அனுமதிக்கப்படும்.
- வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஆலயத்திற்கு வருகைதருவோர் 11.04.2025 அன்று காலை 6 மணிக்கு முன்னதாக உள்வருவதுடன் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் வியாபாரப் பொருட்களையும் குறித்த நேரத்திற்கு முன்பாகக் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- ஆலய வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- அடியவர்கள் தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
- போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.
- பறவைக்காவடி, காவடி என்பவற்றின் போது பக்திப் பாடல்கள் மாத்திரம் ஒலிக்கவிடப்பட வேண்டும்.
- அலுவலகம் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஆலயச் சூழலில் கற்பூரம் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**ஆலய பரிபாலன சபை,**
**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.**

(C-2655)



**கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்**



எமது கலாமன்றத்தின் வளர்ச்சிக்கு அரும் பங்காற்றிய இசை ஆசிரியரான

**சிதம்பரஜோதி அமரர் சந்திரிக்கா கணேஸ்பரன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி இசை உலகிற்கு குறிப்பாக பண்ணிசைத் துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளில் இளைப்பாற மனதாரப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

(C-2654)

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ் கிளை

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வணிக பீட வளாகத்தில் மாணவர்களுக்கான தொழிற்சந்தை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத் துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெற்றது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத் தொழில் வழிகாட்டல் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை - 2025 பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தலைமையில் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு தொழிற் சந்தையைத் திறந்து வைத்தார்.

முகாமைத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான தொழில் பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், வங்கிகள், கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 30 தொழில் வழங்குநர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொண்டதோடு, கலந்து கொண்ட தொழில் வழங்குநர்களிடம் தமது தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பங்களையும் சமர்ப்பித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதியும், கணக்கியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத் தொழில் வழிகாட்டல் அலகின் தலைவர் என். உமாகாந், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (6-8)

# நெடுந்தூர பயணநேரம் அதிகம் சுற்றுலாத்துறைக்கு பின்னடைவு

## வட மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண நேரம் அதிகம் என்பதைச் சுட்டிக் காட்டியதுடன் சுற்றுலாத் துறைக்குப் பின்னடைவு இருக்கின்றது என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் வட மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் வடக்கில் சுற்றுலாத்துறைக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ள நிலையில் அதனைக் கூடுதல் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும், உலக வங்கியும் அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டு சென்றார்.

அதேபோன்று விவசாயம், மீன்பிடித் துறைகளின் பெறுமதி சேர் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என ஆளுநர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார். (6)

# வவுனியா பல்கலையில் மருத்துவபீடம் ஆரம்பிக்க ஆராய்வு

(வவுனியா)

வவுனியா பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தினை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட முயற்சியாக நேற்று முன்தினம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று பல்கலைக் கழக வளாகத்தில் இடம் பெற்றது.

வவுனியா பல்கலைக் கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிப்பதன் ஊடாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி மற்றும் வவுனியா வைத்தியசாலையின் அபிவிருத்தி திட்டங்கள் உட்பட பல்வேறு அபிவிருத்தி முனைப்புகளை ஏற்படுத்த முடியும் என்கின்ற நோக்கத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் முயற்சியினால் முதற்கட்ட பேச்சுக்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரோடு இடம் பெற்றது.

இதேவேளை பல்கலைக் கழகத்திற்கு மருத்துவபீடம் அமைக்கப்படுமாக இருந்தால் அதற்கான நிதி பலத்தினை பெற்று கொள்வது தொடர்பிலும் அதன் சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு இருப்பதுடன் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதியை பெறுவதற்கான ஏற்பாடுகளுக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் வவுனியாப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ.அற்புதராஜா, பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர், பல்கலைக் கழகத்தின்துறை தலைவர்கள், வைத்தியர்கள், பிரதேச செயலாளர், சட்டத்தரணிகள் ஆகிய பலர் இந்த கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். (6-8)

# நட்டத்தில் இயங்கும் இ.போ.ச வின் 55 டிப்போக்கள்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் மொத்தம் 55 டிப்போக்கள் தற்போது நட்டத்தில் இயங்கி வருவதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 54 இலங்கைப் போக்குவரத்து சபை டிப்போக்கள் மட்டுமே செயற்பாடுகள் மூலம் இலாபம் ஈட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

நட்டத்தில் இயங்கும் 55 டிப்போக்களுக்கு பல புதிய நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது விளக்கினார். (நி-8)

# 18, 853 பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்க அனுமதி

(கொழும்பு)

18,853 பட்டதாரிகள், இளைஞர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.


பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழு வழங்கிய பரிந்துரையைத் தொடர்ந்து இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரச துறையில் உள்ள வெற்றிடங்களைக் கருத்தில் கொண்டு எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல் ஆட்சேர்ப்பு நடைபெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்திர அமைச்சரவை ஊடக சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் ஜயதிஸ்ஸ கொவிட்-19 தொற்றுநோய் அண்மைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள வேலையின்மை விகிதத்தைக் கருத்தில் கொண்டு நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கு வதற்காக 2025 வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் 10 பில்லியன் ரூபாயை ஒதுக்கியதாகத் தெரிவித்தார்.

அதன்படி, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தரவுகளின் கீழ் ஆட்சேர்ப்பு செயல்முறை நடைபெறும். (நி-8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. அரியரத்தினம் திவ்யராஜ்
(Dip.in.Tech, B.A,PGDE(Distinction) M.Ed)
கடந்த 20.03.2025 அன்று
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது
முதுகல்விமாணி பட்டம் (M.Ed) பெற்ற
எமது பாடசாலை ஆசிரியரை
பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று
மேன்மையுற வாழ்த்துகின்றோம்.
(C-2647)

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம் மற்றும்
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்
Congratulations

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

தொண்டர்சபை நிர்வாகத் தெரிவுக் கூட்டம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாக்கள் சபையின் கீழ் இயங்கும் தொண்டர்சபையினரின் புதிய நிர்வாகத் தெரிவு 20.04.2025 (ஞாயிறு) காலை 10 மணிக்கு ஆலய கலாசாரமண்டபத்தில் இடம்பெறும்.

அனைத்து தொண்டர்சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

09.04.2025
(3895)
தர்மகர்த்தாக்கள்சபை, தொண்டர்சபை,
அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரிதகதியில் குடிநீர்த்திட்டம் முன்னெடுக்க நடவடிக்கை

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்த் திட்டம் எவ்வளவு விரைவாக மக்களைச் சென்றடைய முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்றடைவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.**



வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுவதையும் குறிப்பிட்டார். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவைகளையும் கருத்தில் கொள்ளும் போது குறிப்பாக முதலீட்டு வலயங்களை வடக்கில் ஆரம்பிக்க உள்ள நிலையில் அவற்றுக்கும் குடிநீர் தேவை என்பதால், அதையும் கருத்திலெடுக்க வேண்டும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தீவகப் பிரதேசங்கள் சுற்றுலா ரீதியாக அபிவிருத்தி செய்யும்போது அங்கும் குடிநீருக்கான கேள்வி அதிகரித்துச்செல்லும்எனவும்அதனை நிவர்த்திக்கும் வகையில் கடல் நீரை நன்னீராக்கும் செயற்பாடுகளை அங்கு அதிகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டு 60 ஆண்டுகள் அடுத்த ஆண்டுடன் நிறைவு செய்யப்படவுள்ளதைக் குறிப்பிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையுடனான தமது உறவுகள் திட்டங்கள் தொடரும் எனவும் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின பிரதிநிதிகள, கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தின் பொறியியலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (6-8)

# அவுஸ்திரேலியாவில் சமாதான நீதவானாக நியமனம்



நல்லூர் நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த திலீபன் அமிர்தலிங்கம் அவுஸ்திரேலியாவில் சமாதான நீதவானான நியமனம் பெற்றார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி மெல்பேர்னின் தென் கிழக்குப் பிராந்திய டன்டினோங் நீதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்செய்து கொண்ட திலீபனை பாராட்டி விக்ரோறிய தமிழ் கலாசார கழகத்தால் அதன் போஷகர் சட்டத்தரணி சச்சிதானந்தன் விக்ரோறிய தமிழ் கலாசார கழக ஸ்தாபகர், சங்க நாதம் வானொலி இயக்குநர் விக்கி விக்கிரமசிங்கம், குடிவரவு திணைக்கள முன்னாள் ஆலோசகர் John vrach ஆகியோர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

திலீபன் அமிர்தலிங்கம் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# யாழ். முற்றவெளியில் வர்த்தக சந்தை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தொழிற்துறைத் திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் புடவைக் கைத்தொழில் திணைக்களம் இணைந்து நடத்தும் "வட மாகாண தொழிற்துறை வர்த்தகச் சந்தை" எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை, 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் வர்த்தகச் சந்தையில் நெசவு உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், உணவு உற்பத்திகள், விவசாய உற்பத்திகள், ஆடை உற்பத் திகள், வியாபார ஆலோசனை உள்ளடங்கலாக 100 கூடங்கள் அமைக்கப்பட்டு இத் தொழிற்துறை வர்த்தக சந்தை இடம் பெறவுள்ளது. (நி-8)

# மல்லாவி யோகபுரநாதருக்கு நாளை தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யோகபுரம், மல்லாவி, வன்னிப்பெருநிலம், அனிஞ்சியன் குளம் யோகபுரநாதர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து மஹோற்சவங்கள் இடம்பெற்ற நிலையில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் 12 ஆம் திகதி சனிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

# நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கழகம் நடத்தும் "உங்களை வெளிப்படுத்துங்கள்" நூல் அறிமுக நிகழ்வு இன்று மாலை 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட கருத்தரங்க மண்டபத்தில் ஊடகக் கழகத் தலைவர் செல்வன் த.விதுஷன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-8)

# சுன்னாகம் ஐயனாருக்கு நாளை தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீஅரிகரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த் திருவிழாவானது நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும் என்பதையும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவம் தீர்த்தக் கேணியில் நடைபெறும் என்பதையும் ஆதீன கர்த்தாக்கள் அறியத்தருகின்றனர். (நி-8)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
ஆசிரியை
**திருமதி.இலங்காராணி லோகநாதன் அவர்களின்**
அன்புத் தந்தையார்
**அமரர்:**
**சின்னப்பிள்ளை செல்லத்துரை**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.


# கற்கைநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரியில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

அதன்படி ஆரம்ப ஆங்கில கற்கை நெறி, உல்லாசப்பயணமும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் ஆரம்ப கற்கை நெறி, கணனி மயப்படுத்தப்பட்ட கட்டடக்கலை வரைபடங்களை வரைதல், கணனி வரை கலை ஆகிய கற்கை நெறிகள் இம் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)



2022, 2023 ஆண்டுகளுக்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று திறமைச் சித்தியடைந்த மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நிறுவனத்தால் 06.04.2025 அன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களிற்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து மோடி திரும்பியவுடன் செயற்பாட்டை ஆரம்பித்தது அதானி நிறுவனம்

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்து திரும்பிய கையுடன் இலங்கையில் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது அதானி நிறுவனம்.

இதன்படி அதானி துறை முகங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் நிறுவனம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு சர்வதேச முனையம் அதன் பணிகளை ஆரம்பித்திருப்பதாக அறிவித்துள்ளது.

அதேவேளை கொழும்பு மேற்கு சர்வதேச முனையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதானது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான பிராந்திய ஒத்துழைப்பில் ஒரு மைல்கல் அடைவாகும் என அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார். அத்தோடு இம் முனையமானது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் எதிர்கால வர்த்தக மேம்பாட்டைக் காண்பிப்பதுடன் மாத்திரமன்றி, இலங்கைக்கு பெருமைமிகு முன்முயற்சியாகத் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# டொனால்ட் ட்ரம்பிற்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய தீர்வை வரியினால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் ஏனைய விளக்கங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அனுப்பிவைத்துள்ளார் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பாராளுமன்றில் தெரிவித்தார்.


புதிய வரித்திருத்தத்தினால் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகள், அரசாங்கம் என்ற அடிப்படையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் போன்றன இந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த வரியைக் குறைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்க ஜனாதிபதியிடம் இந்த கடிதம் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

## பெயர்மாற்ற அறிவித்தல்

கலாசாலை வீதி திருநெல்வேலியில் வசிக்கும் அந்தோனி துரைராஜசிங்கம் எனும் பெயரை 09.04.2025 இன்று முதல் துரைசிங்கம் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள**
**அ.துரைசிங்கம்**

## ராஜா பிளாசா அறக்கொடை நிதியத்தின் உதவி வழங்கும் நிகழ்வு-2025



மறைந்த இரும்புக்கடை அண்ணன்
**அமரர்.சந்திரசேகரம்பிள்ளை குபேந்திரநாதன்**
நினைவாக ராஜா பிளாசா அறக் கொடை நிதியத்தின் ஊடாக பாடசாலை மாணவர்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் 100 வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு

**காலம்:09.04.2025 புதன்கிழமை**
**நேரம்:பி.ப 3.00**
**இடம்: ஆசிமட அரசடி விநாயகர் திருமண மண்டபம், கோண்டாவில் கிழக்கு**

(3876)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ராஜா பிளாசா அறக்கொடை நிதியத்தினர்**

## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>7 இல் செவ்<br>கி.பா: 42<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: BSc(civil ), Project Engineer Singapore<br>எதிர்பார்ப்பு : Engineer, Accountant<br>தொ.இ: B/15301 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 33<br>8 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc, NGO (Colombo)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/15303 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>10 இல் சூரி செவ்<br>கி.பா: 17 3/4<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L, Welding<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15302 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 3<br>5 இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc (Final year)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ: G/15307 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:37 1/2 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BCom, Financial Advisor(Canada)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் , விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15304 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>12 இல் செவ்<br>கி.பா: 13<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Doctor, Engineer<br>தொ.இ: G/15309 |

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**63/3, மெய்கண்டான் பாடசாலை ஒழுங்கை, வட்டாரம்-8**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 8, மெய்கண்டான் பாடசாலை ஒழுங்கையிலுள்ள இல: 63/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சீனியர் சுந்தரம்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் ஓர் பகுதியினை **சின்னையா அப்புத்துரை பெண் கமலாதேவி ஆகியவர்** பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் 2142/19.11.1969ஆம் இலக்க உறுதியால் **சுந்தரம்பிள்ளை குணரத்தினமும், சுந்தரம்பிள்ளை இராசதுரையும், சுந்தரம்பிள்ளை உமாதேவியும், சுந்தரம்பிள்ளை ஈஸ்வரியும், சுந்தரம்பிள்ளை தவத்துரையும், சுந்தரம்பிள்ளை செல்வமணியும், சுந்தரம்பிள்ளை கைம்பெண் நல்லமுத்துவும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது. எங்கள் காலஞ்சென்ற பிதா சீனிவாசகம் சுந்தரம்பிள்ளையின் சொந்தமும் ஆட்சியுமாயிருந்து எங்களுக்கு வந்த முதுசமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் மற்றோர் பகுதியினை **நல்லையா வயித்திலிங்கம் பெண் இராசேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் 2925/10.12.1975ஆம் இலக்க உறுதியால் **பரமகுரு இராசகுருவும் பெண் மல்லிகாதேவியும், கதிரவேலு புனிதமலரும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது. எங்கள் காலஞ்சென்ற பிதா சீனிவாசகம் கதிரவேலுவின் சொந்தமும் ஆட்சியுமாயிருந்து எங்களுக்கு வந்த முதுச்மும் ஆட்சியுமானது எனக் குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நவரத்தினம் சேதுகாவலரும் பெண் இராசேஸ்வரியும், சின்னையா அப்புத்துரையும் பெண் கமலாதேவியும், நல்லையா வயித்திலிங்கமும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்ப்பங்கிற்கு சொந்தகாரர்களாகவிருந்து குறித்த ஆதனங்களை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 411/09.12.1980ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து நிந்தமாக்கப்பட்ட தத்தமது ஆதனங்களுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**அரியரத்தினம் பெண் தங்கம்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 478/07.09.1981ஆம் இலக்க உறுதியால் குறித்த **நவரத்தினம் சேதுகாவலரும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி நிந்தமாக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சின்னையா அப்புத்துரை கைம்பெண் கமலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1673/14.02.1991ஆம் இலக்க உறுதியால் குறித்த **அரியபுத்திரர் அரியரத்தினமும் பெண் தங்கம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சின்னையா அப்புத்துரை கைம்பெண் கமலாதேவி** காலஞ்செல்ல குறித்த ஆதனம் முழுவதும் அவரின் ஏக வாரிசான **அப்புத்துரை திருக்குமார் ஆகியவருக்கு** முதுசமாக வந்தடைந்தது.

**நிஷாந்தன் பெண் உசந்தினிதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9508/20.08.2021ஆம் இலக்க உறுதியால் குறித்த **அப்புத்துரை திருக்குமார்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நிஷாந்தன் பெண் உச்ந்தினிதேவி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நிஷாந்தன் பெண் உசந்தினிதேவி** ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கப் பொருட்களுக்கு விதித்த வ

# சீனா நீக்காவிட்

## மேலும் 50 சதவீத வரி விதிக்

## ட்ரம்ப் எச்சரிக்



**(வோஷிங்டன்)**

**அமெரிக்கப் பொருட்களுக்குச் சீனாவினால் வரி நீக்கப்படாத பட்சத்தில் சீனாவிலிருந்து செய்யப்படும் பொருட்களுக்கு மேலதிகமாக 50 விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அமெரிக்க ஜனாதிபதி, ஏனைய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய வரிகளை நீக்குவது குறித்து தாம் பரிசீலிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

புதிய வரி விதிப்பிற்குப் பின்னர் பல்வேறு நாடுகள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்வந்துள்ள நிலையில், சீனா அமெரிக்கப் பொருட்களுக்கு விதித்த வரியை நீக்காவிட்டால் சீனப் பொருட்களுக்கு மேலதிக வரி விதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் கடந்த 5 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 10 சதவீத அடிப்படை வரி விதிக்கப்பட்டது.

அத்துடன் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 40 சதவீதத்துக்கும் அதிக பரஸ்பர வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 20 சதவீத வரியை விதிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், தற்போது இன்று முதல் அமுலாகும் வகையில் 34 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் சீனா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 34

## செல்போன் பாவனையால் அதிகரிக்கும் ஆபத்து

## ஆய்வில் தகவல்

(ஸ்பெயின்)

செல்போன்கள் தற்போது வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இளைஞர்கள் செல்போனின் பாவனையில் அதிகம் மூழ்கிக் கிடக்கிறார்கள்

ரீல்ஸ் வீடியோக்கள், சமூக வலைத்தளங்கள் என எப்போது பார்த்தாலும் அதிக அளவில் இளைஞர்களின் செல்போன் பாவனை அதிகரித்துள்ளது

இந்நிலையில் செல்போன் பாவனையின் அதிகரிப்பால் ஆபத்துக்களும் அதிகரிக்கின்றது. இதன் பாவனையால் ஏற்படும் ஆபத்து குறித்து சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

இதில் 25 வயது உடைய 104 ஆண்கள், 293 பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தை சேர்ந்த சிலரை இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர். அவர்கள் அன்றாடம் வரும் 100 சதவீதம் தொடர்ந்து ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்தி வந்தனர் .

ஆய்வின் முடிவில் அதிக அளவில் ஸ்மார்ட் போன் பயன்படுத்தும் இளம் பெண்கள் மனநலம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பது தெரியவந்துள்ளது.

மேலும் அதிக அளவில் பயன்படுத்தும் பெண்கள் அதிக துன்பங்களை எதிர்கொள்ள நேரிடும், ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும். எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் போன் பயன்படுத்துவதால் பதற்றத் தன்மை அதிகரிப்பதாகவும் மன உளைச்சல், தீங்கு விளைவிக்கும் நடத்தை, தற்கொலை எண்ணம் அதிகரிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இளைய தலைமுறையினரை இதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள மாற்றுவழியிலான ஆய்வுகளை மேற்கொள்ள இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)



## மக்ரோன் எ சுற்றுப்ப



(கெய்ரோ)

காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப் படுத்தியுள்ள நிலையில் 2 நாள் சுற்றுப் பயணம்

தொடர் னும் மக்ரோ வுள்ளா ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## வரியை
## ட்டால்
## ......................
## க்கப்படும்!

## கை

ல் விதிக்கப்பட்ட
து இறக்குமதி
50 சதவீத வரி
டொனால்ட் ட்ரம்ப்

சதவீத வரியை விதித்தது.

இந்தநிலையில், டொனால்ட் ட்ரம்பின் புதிய அறிவிப்பு அமுலாகுமாக இருந்தால், சீனாவிலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 104 சதவீத வரி அறவிடப்படும் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

## எகிப்திற்குச்
## பயணம்



மேற்கொண்டு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் எகிப்திற்குச் சென்றுள்ளார்.

இவ் விஜயத்தின் போது காசாவில் இடம்பெறுவரும் போரை நிறுத்துவது தொடர்பாக எகிப்தின் ஜனாதிபதியுடனும் ஜோர்டான் மன்னருடனும் மக்ரோன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## 6 ஆண்டுகளுக்குப் பின் வடகொரியாவில் மரதன் ஓட்டப்போட்டி

(பியாங்யாங்)

வடகொரியாவில் 6 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக பியாங்யாங் சர்வதேச மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றுள்ளது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் சுமார் 200 வெளிநாட்டு வீரர்களை வடகொரியாவின் தலைநகர் வரவேற்றுள்ளது.

1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த மரதன் ஓட்டப்போட்டி வடகொரியாவின் முதல் ஜனாதிபதி கிம் இல் சுங்கின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நடத்தப்படுகிறது.

இறுதியாக 2019 ஆம் ஆண்டு மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. அதில் 950 வெளி நாட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

கொவிட்-19 தொற்று பரவியமையை அடுத்து வடகொரியா மரதன் ஓட்டப் போட்டியை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது.

இந்நிலையில், வடகொரியா மீண்டும் போட்டியை நடத்த கடந்த ஆண்டு முதல் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை மட்டுமே அதன் தலைநகருக்குள் அனுமதித்தது.

தொற்றுநோய்க்கு முன்பு இருந்ததைப் போலவே, ஓட்டப்பந்தய வீரர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட சுற்றுலாக் குழுவின் ஒரு பகுதியாக நாட்டிற்குள் நுழைய வேண்டியிருந்தது.

போட்டி நிகழ்வின் பிரத்தியேக பங்காளராக திகழும் பீஜிங்கை தளமாகக் கொண்ட பயண நிறுவனமான கோரியோ டூர்ஸ், பீஜிங்கிற்குச் சென்று திரும்புவதற்காக 2,195 யூரோக்களுக்கு விமானப் பயணம் உட்பட ஆறு நாள் மரதன் சுற்றுப்பயணங்களை வழங்குகிறது.

"பியாங்யாங் மரதன் மிகவும் தனித்துவமான அனுபவமாகும், ஏனெனில் இது உள்ளூர் மக்களுடன் தொடர்பு கொள்ள ஒரு வாய்ப்பை வழங்குகிறது" என அந்த நிறுவனம் தனது வலைத் தளத்தில் தெரிவித்துள்ளது. (நி-8)




## ட்ரம்ப் - நெதன்யாகு வெள்ளை மாளிகையில் சந்திப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்குமிடையில் உத்தியோகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது காசா விவகாரம், வர்த்தகப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் பேசியதாகக் கூறப்படுகிறது.

என்னை மீண்டும் ஒரு முறை வெள்ளை மாளிகைக்கு அழைத்ததற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அவர் ஒரு குறிப்பிடத்தக்க நண்பர். அவர் எங்கள் கூட்டணியின் சிறந்த ஆதரவாளர், மேலும் அவர் சொல்வதைச் செய்கிறார்.

அமெரிக்காவுடனான வர்த்தகப் பற்றாக் குறையை நாங்கள் நீக்குவோம். அதை மிக விரைவாகச் செய்ய நாங்கள் விரும்புகிறோம்.

இது சரியான செயல் என்று நாங்கள் நினைக்கிறோம், மேலும் இஸ்ரேல் பல நாடுகளுக்கு ஒரு முன் மாதிரியாகச் செயற்பட முடியும் என்று நான் நினைக்கிறேன் என இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், "நாங்கள் வரிகளை நிறுத்துவது பற்றி பேச்சுவார்த்தைக்கு பரிசீலித்து வருகிறோம்.

அவை நியாயமான ஒப்பந்தங்களாக இருக்கப் போகின்றன. மேலும் சில சந்தர்ப்பங்களில் குறித்த நாடுகள் கணிசமான வரிகளைச் செலுத்தப் போகின்றன என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், காசாவிற்கு அமைதி வாக்குறுதி அளிக்கப்பட்டது என்றும், ஆனால் அது பலனளிக்கவில்லை எனவும் காசா, ஒரு ஆபத்தான மரணப் பொறி என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமரவுக்கு பிணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவருக்குப் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த போது நடைபெற்ற மோசடி தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த நீதவான் பிணையில் செல்ல அனுமதித்ததோடு, சந்தேக நபர் வெளிநாடு செல்வதைத் தடை செய்யும் உத்தரவையும் பிறப்பித்துள்ளார். (நி-8)

# இந்தியாவின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ள அநுர அரசு

## மகிழ்ச்சியில் முன்னாள் எம்.பி எரான்

(கொழும்பு)

இந்தியாவின் முக்கியத்துவத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இறுதியாக அங்கீகரித்துள்ளது என்பதை அறிந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன நேற்று தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றி, இந்தியாவின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது என்பதையும், அது உலகில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்று என்பதையும் அறிவது மகிழ்ச்சியளிக்கிறது என்று விக்கிரமரட்ன தெரிவித்தார்.

எனினும், அரசாங்கம் மக்களின் நம்பிக்கையை வெல்ல வேண்டும், மேலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்த விபரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒப்பந்தங்கள் முக்கியமானவை, ஆனால் அவை இலங்கையின் கலாசாரம் மற்றும் இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கக்கூடாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 350 | 300-400 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160-180 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 700 | 500-550 | 800 |
| தக்காளி | 350 | 250 | 250 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 220 | 200-250 | 200 |
| கோவா | 350 | 260 | 350 | 250 | 320 |
| கரட் | 600 | 500-600 | 700 | 600 | 500 |
| பூசணி | 200 | 200 | 160 | 160-180 | 200 |
| புடோல் | 200 | 250 | 250 | 220 | 320 |
| வாழைக்காய் | 150 | 80 | 120 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-350 | 250 | 120-280 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 250 | 140 | 160 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 350-400 | 500 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 400 | 250 | 150 | 300 |
| பயற்றங்காய் | 350 | 300 | 250 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 230 | 250 |
| பீற்றூட் | 400 | 400 | 250 | 250 | 400 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 450-500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 2000 | 1500-2000 | 2400 |
| போஞ்சி | 550 | 550 | 550 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 200 | - | 400 |
| கீரை – 1 பிடி | 120 | 80-120 | 150 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 160-200 | 150-250 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 400 | 550 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | - | 500 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 100 | 60 | 80 |
| ஈரப்பலா | 100 | - | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 353

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அளவு கடந்த அன்பு!

உங்கள் மேலே எனக்கு அளவு கடந்த அன்பு என்று யாராவது சொன்னால் அதை அலட்சியமாக நினைக்கக்கூடாது. அது சீரியஸான விடயம்.

அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே இடைஞ்சல் தானே. அன்பும் அப்படித்தான். அன்பு அதிகமாக இருந்தால் அது எப்போதும் உங்களுக்கு கெடுதல் செய்யும் என்கின்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.தசரதன் கதை என்ன ஆனது? கைகேயி மேல் வைத்த அளவு கடந்த அன்பு ராமன் காட்டுக்குப் போகும்படி ஆகிவிட்டது.

தசரதன் எப்பேர்ப்பட்ட அரசன்.விஸ்வாமித்திரர் சொல்கிறார். (கம்பராமாயணம்) என்னை மாதிரி முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால் முதலில் முருகனிடம் போவோம். அதன்பின் பரமசிவனிடம் போவோம். அதன் பின்பு திருமாலிடம் போவோம். பின்பு பிரம்மன், இந்திரன் இவர்களைப் போய்ப் பார்ப்போம். இவர்களால் எல்லாம் முடியவில்லை என்றால் அயோத்திக்கு வருவோம் என்கிறார்.

உன்னை விட்டால் வேறு கதி உண்டா என்று தசரதனைப் பார்த்து விஸ்வாமித்திரரே சொல்கிறார்.

அப்பேர்ப்பட்ட அரசன் – தசரதன் கைகேயி காலில் விழுகிறான். உன் பாதங்களைத் தொட்டு கெஞ்சிக் கேட்கிறேன் இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே என்றான்.

தசரதனுடைய இந்த நிலைமைக்கு என்ன காரணம்? அவன் கைகேயி மேலே வைத்த அளவு கடந்த அன்புதான் காரணம்.

இப்போது சொல்லுங்கள் அன்பாக இருந்தாலும் அது அளவுக்கு மீறிப் போனால் கெடுதல் செய்யுமா? செய்யாதா?அது மட்டுமில்லை அளவு கடந்த அன்பு நீதிக்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களையும் செய்ய வைத்துவிடும்.

தசரதன் மிகச் சிறந்த நீதிமான். தர்மத்துக்கு விரோதமாய் ஒரு காரியமும் செய்யாதவன். அப்பேர்ப்பட்டவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா?உனக்காக நான் என்ன செய்ய வேண்டும் சொல் செய்கிறேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா? கொல்கிறேன்! மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை விடுதலை செய்யச் சொல்கிறியா செய்கிறேன்!எந்தப் பிச்சைக்காரனையாவது கோடீஸ்வரன் ஆக்கச் சொல்கிறாயா? ஆக்குகிறேன்! அல்லது கோடீஸ்வரனை பிச்சைக்காரனாக ஆக்கவேண்டுமா ஆக்குகிறேன் என்கிறார்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்பேர்ப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்!

மனைவியிலே வைத்த அளவு கடந்த அன்புதான் காரணம்.

திரிசூலம், வஜ்ராயுதம், வாள் இதுகளாலே தாக்கப்பட்டால் கூட அதையெல்லாம் பெரிதாக எண்ணாத ஒருவன் காமதேவனுடைய மலர் அம்புகள் தாக்கினால் அதை அவனாலே தாக்குப்பிடிக்க முடிவதில்லை விழுந்து விடுகிறான்.

காமதேவனுக்கு உள்ள மகிமையே அதுதான் என்கிறார் துளசிதாசர். அதனாலே தான் பெரியவர்கலெல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால் எதையும் அளவுக்கு மீறி செய்யாதே என்கிறார்.

அப்பா, அம்மா, மனைவி, பிள்ளைகள் எல்லோர் மீதும் அன்பு அவசியம் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பாக இருக்கக்கூடாது. அளவுக்கு மீறியும் இருக்கக்கூடாது. அப்போதுதான் வாழ்க்கை சுகமாக இருக்கும். இல்லை என்றால் அவஸ்தை தான்!

அளவுக்கு மீறிய அன்பு புரிகிறது அது சரி.அறிவுக்கு புறம்பான அன்பு என்பது எப்படி?ஒரு தாய்க்கு ஜலதோசம் அல்லது ஏதோ ஒரு தொற்று நோய் என்று வைத்துக்கொள்வோம்.

அந்த அம்மாவுக்கு தன் குழந்தைகள் மேலே அளவு கடந்த அன்பு. தனக்கு நோய் இருக்கிறது. அது அடுத்தவர்களுக்குத் தொற்றக்கூடாது என்று தெரிந்திருந்தும் தாய் குழந்தை மீது அன்பைக் காட்டுவதற்காக அந்தக் குழந்தை முத்தம் கொடுத்தால் நன்றாக இருக்குமா? இதுதான் அறிவுக்குப் புறம்பான அன்பு.

அதுமாதிரி விலங்குகளிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதற்காக புலிக்கு முத்தம் கொடுக்க முடியுமா?அப்படிக் கொடுத்தால் அது அறிவுக்குப் புறம்பான அன்பு. அதனாலே அன்புகூட அறிவு பூர்வமாக இருக்க வேண்டும்.

இந்தக் காலத்து காதலன் தன் காதலியிடம் சொன்னான். இதோ பார் உன் மேலே எனக்கு அளவு கடந்த அன்பு. உனக்காக என்ன செய்ய வேண்டும் சொல் என்றான். நெருப்பிலே நடக்க வேண்டுமா? நடக்கிறேன். நீரிலே குதிக்க வேண்டுமா? குதிக்கிறேன். உயிரையே கொடுக்க வேண்டுமா கொடுக்கிறேன் என்றான். சரி வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இதே இடத்திற்கு வா என்றாள் அந்தப் பெண். இவன் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு அன்றைக்கு மழை பெய்யாமல் இருந்தால் வந்து விடுகிறேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோழியபுரம் பத்ம வெளியீடு 'நடமாடிய தெய்வம்' (மஹாதேவ வாத்தியார்)

கடந்த 25.03.2025 செவ்வாய்க்கிழமை சிவஸ்ரீ தாணு. மஹாதேவ குருக்கள் ஐயா அவர்களின் இறைபதம் எய்திய செய்தி எம்மைப் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது.

நாம் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமெனில் நமக்குக் கிடைக்க வேண்டியது முதலில் குருவும் பின்னர் தாரமும் என்பார்கள். எனவே தான் தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்று நம் முன்னோர்கள் கூறினார்கள்.

அந்த வகையிலே மஹாதேவ வாத்தியாரை அடியேன் குருவாகப் பெற்றது நான் முன்பு செய்த பெரும் பாக்கியம் என்றே கூறுவேன்.

நான் ஏற்கனவே யா/ நீராவியடி சிவானந்த குருகுலத்தில் கல்வி பயின்று "அர்ச்சகர்" தராதரம் பெற்றேன். பின்னர் மேலதிக கல்வியைத் தொடர விரும்பினேன். அப்போது சிவானந்தக் குருகுல நண்பன் வண்ணார் பண்ணை ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ . பாஸ்கரக்குருக்கள் ஐயா அவர்கள் நீங்கள் நினைக்குமாப்போல எங்கும் படிக்கவே முடியாது. அப்படியானால் இணுவில் மஹாதேவ வாத்தியாரிடம் ஒசன்றால் மட்டுமே உமது எண்ணம் நிறைவேறும் என்றார். அவர் கூறியவாறே இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபராகிய மஹாதேவ வாத்தியாரிடம் சென்று எனது விருப்பத்தைக் கூறினேன். அவரும் என்னை அன்புடன் அரவணைத்து நாளை வகுப்புக்கு வருமாறு கூறினார்.

1990 ஆம் ஆண்டளவில் தர்மசாஸ்தா குருகுல மாணவனாக அதிபர் மஹாதேவ வாத்தியாரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டேன். 1992 வரையான இரண்டு வருடங்களும் எனது குருகுலக் கல்வியை முடித்துக் கொண்டேன்.

விசேடமாக ஆகமக் கல்வியுடன் பூஜா விதிகளையும் சைவக் கிரியை முறைகளையும் இவரிடம் கற்றுக் கொண்டேன். வாத்தியார் ஐயா வகுப்பு எடுக்க முடியாத நாட்களில் அவரது தம்பியார் மணி ஐயா அவர்கள் வகுப்பு எடுப்பார். அவரிடமும் நிறையக் கற்றுக் கொண்டேன்.

எனது வகுப்பில் நிறைய அந்தண மாணவர்களே காணப்பட்டனர். நான் மட்டும் அந்தணர் அல்லாத ஒருவன் ஆனால் என்னை வாத்தியார் தனக்கு அருகே இருக்குமாறு கூறி கல்வியைப் போதித்தார். இது என்னை சிந்திக்க வைத்தது. அவரிடம் குலபேதத்தை என்னால் காணமுடியவில்லை. அவர் வாழ்வில்எப்போதும் சமத்துவத்தைப் பேணிய உத்தம பிராமணராகக் காணப்பட்டார். அது மட்டுமல்ல வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு, அந்தணர் என்போர் அறவோர் என்ற பிராமணகுல ஆசாரங்களைக் கடைப்பிடித்த மகாஆசான்.

கம்பீரமான சிவாம்சம் பொருந்திய பொன் நிறமுடைய அழகிய கவர்ச்சியான தோற்றம். உயரத்திற்கேற்ற முகத்தை அழகுபடுத்தும் குடும்பி., நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை வேத பாராயணத்திற்கு ஏற்ற குரல் வளம் ( கணீர்) அவருக்கு நிகர் அவரே தான் அவரின் வேதபாராயணம் கேட்டு தேவர்களே அவ்விடத்திற்கு வந்திடுவார்கள் போலிருக்கும். மந்திர உச்சாடனங்கள் மூலம் அடியவர் மத்தியில் அமைதியை ஏற்படுத்தி விடுவார். முக்கியமாக அன்புடன் அனைவரையும் அணைக்கும் பண்பாளனாகவும் அதே நேரம் மிக்க ஆளுமை கொண்டவராகவும் காணப்பட்டார். எனவே அவரின் சிறப்புக்கள் சொல்லி முடியுமா?

இவ்வாறு சைவ சமய பொக்கிசமாகத் திகழ்ந்த வாத்தியார் ஐயாவை சைவ மக்கள் தங்கள் கோவில்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்களிலும் மஹோற்சவங்களிலும் கலந்து சிறப்பிக்க வேண்டுமென்று விரும்புவர்கள் நிறையவே காணப்பட்டனர். வாத்தியார் ஐயா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற ஒருநாளும் பின் நிற்பதில்லை. வேத மந்திரங்களையும் ஆசியுரைகளையும் சமய சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி அவர்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டார்.

மஹாதேவ வாத்தியார் அவர்கள் பலமொழி அறிவுடன் வேதம், ஆகமங்கள் சாஸ்திரங்களுடன் ஆலய கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள் போன்றவற்றில் மிக்க தேர்ச்சிபெற்ற ஒருவராகக் காணப்பட்டார்.

இது காரணமாக நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் அந்தணப் பெருமக்களும் ஆலய தர்ம கர்த்தாக்களும் கோவில் அடியவர்களும் மஹாதேவ வாத்தியாரிடம் வந்து தங்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களைக் கூறி அதன் விளக்கத்தைப் பெற்று சந்தேகங்களைப் போக்கிக் கொள்பவர்கள் ஏராளம். இவரின் குருகுலக் கல்வியை முடித்த அந்தண மாணவர்களே இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெருங்குருமாராகவும் உதவிக் குருமாராகவும் காணப்படுகின்றனர். இத்தனைக்கும் மத்தியில் வாத்தியார் ஐயா அவர்கள் இலவசக் கல்வியாகவே கற்பித்தார் என்பது அவரின் சிறப்பம்சத்துடன் கூடிய இறைபணியாகும். இதனால் அந்தண மாணவர்களே பெரும் நன்மை அடைந்துள்ளார்கள் என்றே கூற வேண்டும் எனவே அந்தணப் பெருமக்களின் உயர்ச்சிக்காகப் பங்காற்றியதுடன் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்டார் என்றால் அது மிகையாகாது. மஹாதேவ வாத்தியார் ஆற்றிய பணிகள் அளவிடமுடியாதவை. இவரது மறைவு எமக்கு மட்டுமல்ல சைவ உலகிற்கே ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.இவரது வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது என்றே கூறுவேன்.

மஹாதேவ வாத்தியார் இறுதியாக நடக்க முடியாத நிலையிலும் பறாளாய் முருகன் கொடியேற்ற வைபவத்தில் (2023) கலந்து கொள்வதற்காக நல்லூர் முருகன் ஆலயக் குருக்களின் காரில் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்து விட்டுப் போகும் போது எனது ஞாபகம் வாத்தியாருக்கு வந்துவிட்டது.

உடனே எமது கோயிலின் முன்னே காரை நிறுத்திவிட்டு தனது மகனிடம் நான் வந்துள்ளேன் நடக்க முடியாது என்று பிறை சூடியிடம் சொல்லிவிட்டு வா என்று மகனை அனுப்பினார்.

அடியேனும் அவரிடம் சென்று அவரின் திருப்பாதங்களை வணங்கி குரு தட்சணை கொடுத்து குருவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டேன். இதுவே எனது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாகப் பதிந்து விட்டது.

" அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" ஈசுர விநாயகருக்கு பஞ்சாராத்தி ஆராதனை செய்யும் போது தினமும் மஹாதேவாய திறியம் பகாய( என்ற மந்திரத்தை) எனது குருவின் திருநாமத்தை உச்சரித்து நினைத்து வருகின்றேன் என்பதை அனைத்து உள்ளங்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**எனது குருவின் பாதக்கமலங்களை வணங்கும்.**

**ஈசுரவிநாயகர்
தேவஸ்தானம்,
பறாளாய், சோழியபுரம்
09.04.2025**

**சோழியூரான் பிறைசூடிக்குரு,
தர்ம சாஜ்தா குருகுல
பழைய மாணவன்(1990-1992)**


# இராசிபலன்

09.04.2025
பங்குனி 26, புதன்கிழமை
துவாதசி பின்னிரவு 1.08 மணிவரை


மகம் பிற்பகல் 12.25 மணிவரை
சுபநேரம் 4.37-6.07 மணிவரை
இராகுகாலம் 12.07-1.37 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்.


**வளவன்**





அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாடு திருப்தி தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.





குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.





எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.





வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.





வழிபாடு காரிய வெற்றி தரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.





அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், குடும்பச் சுமை கூடும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள்.





செய்தொழில் வளர்ச்சியுண்டு, வங்கிச் சேமிப்புக்கள் உயரும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.





மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.





இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம், அரை குறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.




உடல்நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், செய் தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**நாளைய தினத்தை குறைவாக நம்பு இன்றைய தினத்தை அனுபவி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 743





இவர்கள் எல்லோரையும் சேர்ந்த வீரர்கள் முப்பதினாயிரம் பேர் வந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நடந்த விருந்தின் விமரிசையைச் சொல்ல முடியாது. உன் தந்தையின் பட்டாபிஷேக வைபவத்தின்போது கூட அத்தகைய விருந்துகளும் கோலாகலங்களும் நடைபெறவில்லை. என் பொக்கிஷத்தில் என் முன்னோர்கள் காலத்திலிருந்து நூறு வருஷங்களாகச் சேர்த்து வைத்திருந்த பொருள் அவ்வளவும் அந்த மூன்று நாள் கொண்டாட்டத்தில் தீர்ந்து போய் விட்டது!"

"அச்சமயம் உன்னுடைய கொள்ளுப் பாட்டனாராகிய பராந்தகச் சக்கரவர்த்தியே திருக்கோவலூருக்கு வந்திருந்தார். உன் பெரிய பாட்டனார் கண்டராதித்தரும், உன் தந்தை சுந்தர சோழரும் வந்திருந்தார்கள். ஆண் குழந்தை பிறந்த செய்தி அறிந்ததும் அவர்கள் அனைவரும் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. சோழ குலத்தை விளங்க வைப்பதற்கு நீ பிறந்து விட்டாய் என்று குதூகலம் அடைந்தார்கள். உன் பாட்டனின் மூத்த தமையன்மார்களுக்கு அதுவரையில் சந்ததியில்லை. அரிஞ்சயனுக்கும் உன் தகப்பன் ஒரே மகனாக விளங்கினான்.


அவன் உன் பிராயத்தில மன்மதனையொத்த அழகுடன் விளங்கினான், சோழ குலத்திலோ அல்லது தமிழகத்துச் சிற்றரசர் வம்சத்திலோ அவ்வளவு அழகுடைய பிள்ளையை யாரும் அதற்கு முன் கண்டதில்லை. இதனால் உன் தந்தைக்குச் சில சங்கடங்களும் நேர்ந்தன. குடும்பத்தார் அனைவருக்கும் அவன் செல்லப் பிள்ளையாக இருந்தான். அரண்மனைப் பெண்டிர்கள் அவனுக்குப் பெண் வேடம் போட்டுப் பார்த்து மகிழ்ந்தார்கள். 'இவன் மட்டும் பெண்ணாய்ப் பிறந்திருந்தால்?' என்று பேசிப்பேசிப் பூரித்தார்கள். உன் தந்தைக்குத் தங்கள் பெண்ணைக் கொடுப்பதற்கு இலங்கை முதல் விந்திய பர்வதம் வரையில் உள்ள மன்னாதி மன்னர்களும் சிற்றரசர்களும் தவம் கிடந்தார்கள். அர்ச்சுனனையும் மன்மதனையும் நிகர்த்த அழகன் அவன் என்பதுடன் சோழ சிங்காசனத்துக்கு உரியவன் என்ற எண்ணத்தினாலும் அவ்வளவு ஆர்வத்துடன் இருந்தார்கள். உன் தந்தையை மருமகனாகப் பெறும்பேறு கடைசியில் எனக்குக் கிடைத்தது.

"எங்கள் வம்சத்தில் நாங்கள் ஆண் ஆகட்டும், பெண் ஆகட்டும் மேனி அழகுக்குப் பெயர் போனவர்கள் அல்ல. ஆண் பிள்ளைகள் உடம்பில் எத்தனைக்கெத்தனை போர்க் காயங்களைப் பெறுகிறோமோ அவ்வளவுக்கு அழகுடையவர்களாக எண்ணிக் கொள்வோம். எங்கள் குலத்துப் பெண்களுக்குக் கற்பும், குணமும் தான் அழகும், ஆபரணமும். உன் தந்தைக்கு என் மகளைத் திருமணம் செய்வதென்று தீர்மானித்தபோது, மலையமானாடு முழுதும் அல்லோல கல்லோலப்பட்டது. அவ்வளவுக்குத் தமிழகத்துச் சிற்றரசர்கள் எல்லாரும் அசூயை கொண்டார்கள். அதை நான் பொருட்படுத்தவில்லை. மூன்று உலகும் பிரமிக்கும்படியாக உன் பெற்றோர்களின் திருமணம் தஞ்சையில் நடந்தது. என்றாலும் அப்போது நடந்த கொண்டாட்டத்தைக் காட்டிலும் நீ பிறந்த போது திருக்கோவலூரில் நடந்த கொண்டாட்டம் தான் அதிகக் குதூகலமாயிருந்தது. உனக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றிக் குதூகலமான சர்ச்சை நடந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நரியும் ஆமையும்



ஒரு பெரிய காட்டில் ஒரு ஆமையும் நரியும் நண்பர்களாக இருந்தார்கள்.

அந்த ஆமைக்கு அதனுடைய கனமான ஓட்டைப் பிடிக்கவில்லை. இப்படிக் கனமான ஓடு இருக்குறதாலே தான் தன்னால் வேகமா ஓட முடியவில்லை, பறக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டது அந்த ஆமை.

இறைவன் கொடுத்த உடல் எப்போதும் ஒவ்வொரு மிருகத்திற்கும் மாறுபடும், ஒவ்வொரு மிருகத்திற்கும் தனித்துவமான உடல்வாகுல் கடவுள் ஏன் கொடுத்திருக்கிறார். தெரியுமா? என்று நரி கேட்டது.

எனக்கு ஒன்றும் தெரியாது நீ தான் சொல் என்று சொல்லியது ஆமை.

உடனே நரி சொல்லியது. ஒவ்வொரு மிருகத்தினுடைய வாழ்விடத்துப் பொறுத்தும் இயற்கையிடம் இருந்தும் ஒவ்வொரு மிருகங்களும் கற்றுக் கொள்ளும். பொதுவாக ஏற்படுகின்ற ஆபத்துகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவும் அந்தந்த மிருகங்களுக்குத் தேவை யான உடல் அமைப் பைக் கொடுத்திருக்கி றார்.

உன்னுடைய உடலில் இருக்கின்ற கனமான ஓடு உனக்கு உதவி செய்வதற்குத் தான் அமைந்திருக்கும். அத னால அந்த ஓட்ட பார்த்து வருத்தப்படாத என்று ஆறுதல் சொல்லியது நரி.

இதைக் கேட்ட பிறகும் ஆமைக்குத் திருப்தி இல்லை அப்போது தான் ஒரு வேடன் அந்த நரியை தன்னுடைய வில்லில் குறி வைத்திறக்கிறக்கிதைப் பார்த்தது ஆமை.

உடனே அந்த நரிக்கே பாதுகாப்பாக குறுக்கே வந்து நின்று கொண்டிருந்தது. ஆமை வேட்டைக்காரன் விட்ட அம்பு ஆமையினுடைய முதுகிலே பட்டு கீழே விழுந்தது.

இதைப் பார்த்த நரி நேராக வேட்டைக்காரனை நோக்கி ஓடியது, நரிதன்னை நோக்கி வருவதைப் பார்த்த வேடன் அங்கு இருந்து ஓடிவிட்டான்.

இப்போது பார்த்தியா உன்னுடைய கனமான ஓடுதான் உன்னையும் என்னையும் காப்பாத்தியது. இதே நேரம் உன்னுடைய ஓடு இல்லை என்றால் வேடன் விட்ட அம்பு உன்னை கொன்றிருக்கும்.

இனிமேஉன்னுடைய உடம்பைப் பற்றி யோசிக்காமல் நல்ல படியாக வாழ்க்கையை நடத்து என்று சொல்லியது நரி.

நரி சொன்னது எல்லாம் உண்மை என்று புரிந்து கொண்டது ஆமை. அதற்கு அப்புறமாக நல்ல படியாக வாழ்ந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வட்டம் போட்டு வாழ்வதல்ல வாழ்க்கை நேரத்திற்கேற்றால் போல் திட்டம் போட்டு வாழ்வது தான் சிறந்த வாழ்க்கை. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வணக்கம் என விழித்த பிரதமர் நரேந்திர மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்தமை இன்னமும் பேசு படுபொருளாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

இலங்கையுடன் அவர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், தமிழ்த் தலைவர்களுடனான சந்திப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கலை அரசாங்கம் செய்கிறதா? என அவர்; நம் அரசியல் தலைவர்களிடம் எழுப்பிய கேள்வி, அநுராதரபுரம் ஸ்ரீ மகா போதியில் அவர் ஆற்றிய வழிபாடு, பௌத்த துறவிகளை வணங்கிய பக்குவம் என்பன உட்பட இந்த நாட்டின் அதிஉன்னத விருதான மித்ர விபூஷண விருது அவருக்கு வழங்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஊடகங்கள் இன்னமும் அலசி ஆராய்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, பிரதமர் மோடி இங்கு உரையாற்றும்போது **வணக்கம்** என விழித்து தனது உரையை ஆற்றினார்.

பிரதமர் மோடியின் உரையில் திருக்குறள் இடம்பெற்றிருந்தமை கவனிக்கத்தக்க விடயம்.

அதிலும் அவர் கூறிய திருக்குறளுக்கு இருக்கக்கூடிய பொருள் விளக்கம், குறித்த திருக்குறள் கூறப்பட்டதன் அர்த்தத்தை எடுத்துரைக்கும்.

இதற்கும் மேலாக, திருக்குறள் தந்த வள்ளுவப் பெருமானை வியந்து, அதனூடு தமிழின் பெருமையை முதன்மைப்படுத்திய பிரதமர் மோடியின் உரை மிக நுட்பமானதும் வரலாற்றில் கவனத்துக்கு உரியதாகவும் அமையக் கூடியது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் ஈண்டு கவனிக்க வேண்டும். அதாவது **ஆயுபோவன்** என்று சிங்களத்திலும் **வணக்கம்** என்று தமிழிலும் கூறி, தனது உரையை தொடங்கிய பிரதமர் நரேந்திர மோடி; இலங்கை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வாழுகின்ற நாடு.

இங்கு சிங்களத்துக்கு இருக்கக்கூடிய அதே அந்தஸ்து தமிழுக்கும் உண்டு.

இதை நிரூபிக்கும்பொருட்டே பிரதமர் மோடி தனது உரையில் வணக்கம் எனத் தமிழில் மிகத் தெளிவாக விழித்தார்.

தவிர, இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமானது. அதிலும் தமிழ் காலத்தால் முந்திய மொழி.

திருவள்ளுவர் தந்த திருக்குறள் தமிழின் சிறப்பை – வாழ்வியலை எடுத்துக் காட்டுகின்ற மிகத் தொன்மையான நூல்.

அத்தகைய தொன்மையான தமிழ் இங்கு உள்ளதெனில், இலங்கைக்கும் இங்கு வாழும் தமிழ்க் குடிகளுக்குமான பந்தம் எத்தகையது என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை என்றால், அங்கு சிங்களமும் தமிழும் ஆட்சி மொழி. அரச மொழி.

ஆக, ஆயுபோவன் என்று சிங்களத்தில் கூறுவதுபோல, வணக்கம் எனத் தமிழிலும் கூறி இந்தியப் பிரதமராகிய எனது உரையை ஆற்றுவதுதான் பொருத்தம் என்பதை பிரதமர் நரேந்திர மோடி மிக நுட்பமாக உலகம் முழுமைக்கும் எடுத்தியம்பியுள்ளார் எனலாம்.

இந்தியாவுடனான ஒப்பந்தங்களை

## பகிரங்கப்படுத்தக் கோரியவர்களே இன்று இரகசியம் காக்கின்றனர்

### ஐக்கிய மக்கள் சக்தி விளாசல்

(கண்டி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவை தவிர இவற்றின் உள்ளடக்கங்கள் தொடர்பில் எவ்விதத் தகவலையும் அறிய முடியாதுள்ளது. ஒப்பந்தங்களிலுள்ள காரணிகள் தொடர்பில் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், இதற்கு முந்தைய அரசாங்கங்கள் இந்தியாவுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட போது ஜே.வி.பி கடும் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருக்கிறது.

அது மாத்திரமின்றி அவை தொடர்பில் நாட்டு மக்களும் பாராளுமன்றமும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஆனால் இவர்களது அரசாங்கம் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தங்கள் மிகுந்த இரகசியமாகவே பேணப்படுகின்றன.

கடந்த தேர்தல்களில் மக்கள், தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து ஏமாற்றமடைந்தனர். ஆனால் இம்முறையும் அவ்வாறு ஏமாற்றமடைவதற்கு மக்கள் தயாராக இல்லை.

எனவே பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களை இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும். இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சியும் அங்கிருந்தே ஆரம்பமாகும் என்றார். (ம-7,4)

முல்லைக்கடலில்

## சட்டவிரோத மீன்பிடி இரண்டு பேருக்கு மறியல்

முல்லைத்தீவுக் கடற்பரப்பினுள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இதன்போது இவர்களது படகும் அதிலிருந்த சுமார் 450 கிலோகிராம் மீனும் நீரியல் வளத்திணைக்களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் சான்றாதாரங்களுடன் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7,4)

## தனியார் வகுப்புகளால் அறக்கல்விக்கு பாதிப்பு

### பிரதமர் விசேட கவனம்

(கொழும்பு)

ஞாயிற்றுக் கிழமை காலை வேளையில் தனியார் வகுப்புகள் நடத்துவது பிரிவெனா உட்பட அறநெறி கல்வி முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக மதத் தலைவர்கள் முன்வைத்துள்ள விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தி உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது கேள்வியை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் தர்மசிறி திஸாநாயக்க, ஞாயிற்றுக் கிழமை காலை வேளையில் பிரிவெனா உட்பட ஏனைய மதங்களின் அறநெறி கல்வி நடவடிக்கைகள் நடைபெறுவது வழமை ஆயினும் சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களை போன்று கனிஸ்ட பிரிவு வகுப்பு மாணவர்களும் ஞாயிற்றுக் கிழமை முழுநேர மேலதிக தனியார் வகுப்புகளுக்கு செல்கிறார்கள். இதனால் மதம் சார்ந்த கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதனை கண்காணிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் உள்ளதா? எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் இந்த விடயம் தொடர்பில் சர்வமத தலைவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள். உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். வெகு விரைவில் உரிய தீர்மானத்தை அறிவிப்போம் என்றார். (ம-7,4)

## வியாழேந்திரனுக்கு பிணை கிடைத்தும் சிறை

(மட்டக்களப்பு)

இலஞ்சம் பெற உதவிய வழக்கில் கைதாகி நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், பிணை நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாததால் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று (08) பிற்பகல் சந்தேக நபரான முன்னாள் இராஜாங்க அமைச்சரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் பிணை நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்யத் தவறியதால், அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலநறுவை பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரிடமிருந்து மணல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 1.5 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெறுவதற்கு உதவியதாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திடீர் தீ விபத்து; நால்வர் பலி

### குருநாகலில் சம்பவம்

குருநாகல், வெஹரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (07) இரவு 11 மணியளவில் இந்தத்தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில், மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு தீயை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு வாயு நிரப்புவதற்காக வந்த லொறி ஒன்றுக்கு வாயு நிரப்பும் போது 6 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட இரண்டு வாயு தொட்டிகளில் ஒன்று வெடித்ததால் இந்தத்தீ ஏற்பட்டுள்ளது.

வெடிக்காத மற்றொரு 6ஆயிரம் லீற்றர் வாயு தொட்டியை மாநகர சபை ஊழியர்கள் மிகுந்த முயற்சியுடன் மூடியதால் ஏற்படவிருந்த பாரிய சேதம் ஓரளவு தவிர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 7: உலக ஆரோக்கிய தினம் தாய்சேய் நலனை மையமாக்கியது!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஐக்கிய நாடுகள் தாபனத்தால் ஏப்ரல் 7 ஆம் திகதியை உலக ஆரோக்கிய தினமாக (International Day of Health) பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இம் முறை இத்தினத்தின் கருப்பொருளாக "ஆரோக்கியமான ஆரம்பமும் நம்பிக்கையூட்டும் எதிர்காலமும்" (Healthy beginnings hopeful futures) என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பம் என்றுமே ஆரோக்கியமாகவே ஆரம்பிக்கின்றது. பலத்த எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகவே ஆரம்பம் உருக்கொள்கின்றது. வளர்ச்சி என்பது இல்லையென்றால் ஆரம்பம் சௌபாக்கியமாக இருக்காது. எல்லாவற்றுக்கும் எதிர்பார்ப்புக்கள் அதிகமாகி அவை நம்பிக்கையூட்டுவனவாக இருத்தல் அவசியம். வளர்ச்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்பார்கள். தெரிந்தோ தெரியாமலோ அல்லது புரிந்தோ புரியாமலோ வளர்ச்சியானது கலங்களிலிருந்து அங்கிவரை நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே நம்பிக்கை தரக்கூடிய சிறந்த வாழ்க்கையை எதிர்பார்க்கலாம்.

தாய் சேய் ஆரோக்கியம் எந்தவொரு குடும்பத்தின் அத்திபாரமாவதுடன் குடும்ப மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை பேணவும் இன்றியமையாததாகின்றது. இருவரின் ஆரோக்கியத்தை பேணுவதில் நிறைவான ஊட்டச்சத்தான உணவு, என்றும் கிடைத்தற்கரிய மருத்துவ வசதிகள் என்பன மிகமுக்கியமானவையாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதிலிருந்து செல்வத்துள் சிறந்த செல்வம் தேகாரோக்கியமான வாழ்வு என்பதும் இதனையே சுட்டிநிற்கின்றன. மேற்கூறிய கருப்பொருள் உலகநாடுகளனைத்திலும் தாய் சேய் நல்வாழ்வுக்கான முக்கியத்துவத்தையும் தாய்சேய் இறப்புக்களை தவிர்ப்பதற்கான தடுப்பதற்கான வழிவகைகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கின்றது. அதிலும் இயற்கையின் சீற்றத்தை தவிர்த்து மனித அழிவுகளிலிருந்து தாய் சேய் இருவரையும் பாதுகாக்க வேண்டும் என்னும் நிலைப்பாடு மேலோங்குகின்றது.

அண்மித்த தரவுகளினடிப்படையில் வருடமொன்றுக்கு 3,00,000 பெண்கள் தாய்மையடைந்திருக்கும் போதோ மகப்பேற்றின்போதோ இறக்கின்றனர் என்பது துன்பமானது. அதிலும் 2 மில்லியன் மகவுகள் தங்களது முதலாவது மாதத்திலேயே இறக்கின்றனர் என்பதுடன் 2 மில்லியனுக்கும் மேலான மகவுகள் செத்துப் பிறக்கின்றன (stillborn) என்பதும் கவனிக்கத்தக்கது. இதனை சுருக்கிப் பார்த்தால் ஒவ்வொரு 7 நிமிடத்திற்கும் ஒரு தவிர்க்ககூடிய இறப்பு நிகழ்கின்றது. இதிலிருந்து தாய் சேய் சுகாதாரத்தை பாதுகாக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும் என்பது சொல்லாமல் சொல்லிய செய்தியாகின்றது.

எமது நாட்டின் பொருளாதார சரிவினால் ஊட்டச்சத்தான உணவு கிடைப்பதில் பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றதென்பதனை மறுக்க முடியாது. குடும்ப வருமானம் ஊட்டச்சத்தான ஆரோக்கியமான குடும்பத்தை பேணுவதில் போதியதாக இல்லை என்பதுடன் பொருளாதார சரிவு உற்பத்தியிலும் சரிவினை கொடுத்திருக்கின்றது. இதனால் அன்றாட பொருட்களின் விலையை திகரிப்பு எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகமாகியிருப்பதுடன் அதனை ஈடுசெய்ய குடும்ப வருமானத்தை பெருக்கினாலன்றி குடும்ப தேவையை பூர்த்தி செய்ய முடியாது. தனிமனித மற்றும் குடும்ப சுகாதாரத்தை பேணுவதற்கு அவர்களுக்கான உணவினை பெறுவதில் குடும்ப வேளாண்மை முக்கியத்துவம் பெறுகின்றது. 2018 தொடங்கி 2028 வரையான பத்தாண்டுகளில் குடும்ப வேளாண்மையை மேம்படுத்துவதன் மூலம் 2030 இல் எதிர்பார்க்கப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்கு 3 (சிறந்த சுகாதாரம் மற்றும் நன்னிலை) இனை எட்டக்கூடியதாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்த அளவில் பலநாடுகளில் இந்த அணுகுமுறை நடைமுறையிலில்லை. போர்ச்சூழலும் இயற்கையழிவும் நடைமுறைக்கு சாத்தியமற்ற முரணான அரச கொள்கைகளும் பல நாடுகளின் பொருளாதாரத்தை மேனிலைப்படுத்துவதற்கு பதிலாக சரிவடைய வைத்திருக்கின்றன. இந்த நிலைமை இவ்வாறே தொடர்ந்தால் இறுதியில் அவை தாய்சேய் நலனை பாதிப்பனவாகவும் வளமான சந்ததியை உருவாக்குவதில் பின்னடைவை சந்திப்பனவாகவே அமைந்துவிடுகின்றன.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




குறிப்பாக பெண்களுக்கும் அவர்தம் குடும்பத்திற்கும் அதியுச்ச அரவணைப்பு சீரக உதவியாக உளநல உதவியாக மகப்பேற்றிற்கு முன்பும் பின்பும் அவசியமாக கொடுக்கப்படல் வேண்டும். உயிர் ஒன்றின் பிறப்பில் இன்னொரு உயிர் பிரிந்துவிடக் கூடாது. பெண்களுக்கு மகப்பேறு என்பது மறுவாழ்வு எனக் கூறுவர். ஒருவருக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தாலும் அத்தனை தரம் அவர்கள் மறுஜென்மம் பெறுகின்றனர் என்பதை உணர்வு ரீதியாக நாமுணர்ந்தால் அவர்களுக்கான முக்கியத்துவத்தை அவர்தம் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். உடல்ரீதியான உபாதைகளை விட உளரீதியான பாதிப்பு அவர்களை மிகவும் பாதித்துவிடும். அவர்களுக்கான ஊட்டச்சத்தான உணவு அவர்தம் உடலை உளநலன்களை பேணிப்பாதுகாக்க உதவும். நஞ்சற்ற உணவை நாமே உற்பத்தி செய்யும் வழிமுறைகளுக்குள் குடும்ப வேளாண்மை முன்னிலை பெறுகின்றது. நாமாக வளர்க்கக்கூடிய பயிர்களை எமது வீடுகளில் இருக்கின்ற இடைவெளிகளில் நடவு செய்வதன் மூலம் எமது உற்பத்தியை நாம் பெருக்கிக் கொள்ளலாம். எமது விருப்பப் பயிர்களை வளர்த்து காய், கனி, இலை, என தேவையானவற்றை அறுவடை செய்து உணவாக்கி கொள்வதன் மூலம் உணவில் பல்வகைத்தன்மையை ஏற்படுத்தி தேவையான ஊட்டச்சத்தை பெற்றுக் கொள்ளலாம்.

எமது உணவுத்தேவையில் கணிசமான பங்கினை நாம் குடும்ப வேளாண்மையூடாக (family farming) பெற்றுக்கொள்ளலாம். சராசரி குடும்பமொன்றின் நுகர்வுக்கு தேவையான உணவினை 4 தென்னை, 6 கமுகு, 4 வாழை, இரண்டு மா, பப்பாசி, ஜம்பு, முருங்கை, ஒரு கொய்யா, பெருநெல்லி, பலா, அன்னமுன்னா, வெற்றிலை இவைதவிர மரக்கறிப் பயிர்கள் விரும்பிய அளவில் குறிப்பாக தினமொன்றுக்கான பசும் இலைக் கறிவகைகள் என்பனவற்றுடன் மூலிகைத் தாவரங்களான பிள்ளைக் கற்றாளை, இஞ்சி, மஞ்சள், வசம்பு, இடவசதியிருந்தால் புளி, தேக்கு என்பனவற்றையும் வளர்க்கலாம். குடும்ப சமையலறை மற்றும் விலங்குக் கழிவுகளை மண்புழு மற்றும் கறுப்பு இலையானைப் பயன்படுத்தி உக்கவைத்து சேதன பசளையாக்குதல் என்பனவும் இதிலடங்கும்.

சமூகச் சந்தையின் உருவாக்கம் கொவிட் 19 இன்போது அதிகரித்திருந்த நிலையில் குடும்ப வேளாண்மையில் கிடைக்கும் அதீத உற்பத்திகளை சந்தைப்படுத்தி அதிலிருந்து குடும்ப வருமானத்தை பெருக்கவும் வாய்ப்புக்கள் பலவுண்டு. குடும்ப வேளாண்மையில் உற்பத்தியாகும் பொருட்களை சுத்தமானதாக நஞ்சற்றதாக தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளை பெண்களுக்கு அறிவூட்டுவதன் வாயிலாக குடும்ப வருமானம் சிறக்கவும் வழிவகையுண்டு. டிஜிற்றல் தொழில்நுட்பத்தை குறிப்பாக மொபைல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சமூகக் கட்டமைப்பை உறுதி செய்வதுடன் சிறந்த சுகாதார வசதி வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்ளலாம்.

வடபுலத்தில் ஊட்டச்சத்து குறைபாடு 40 சதவீதத்திற்கு மேலிருந்த கரையோர கிராமத்தில் மணல் மண்ணில் தொழில்நுட்ப அறிவை உட்புகுத்தி மணல் விவசாயஞ் (Sandy agriculture) செய்த பெண் தலைமைத்துவத்தின் முயற்சியினால் கிராமமே மின்சார இணைப்பைப் பெற்றதுடன் ஒவ்வொரு வீட்டிலும் பல வகை தாவரங்கள் வளர்க்கப்பட்டு முழு கிராமமுமே பசுமையான மனைகளை கொண்டு தமது உணவுத்தேவையின் ஒருபங்கினை மனைத்தோட்டங்கள் மூலம் பூர்த்தி செய்வதும் தேவையான ஊட்டச்சத்தை பெற வழி வகுத்திருப்பதனையும் தற்போதும் காணலாம். வாழவழிசெய்யும் திட்டங்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு அனுசரணையாக இருக்குமாயின் பெண்களின் முயற்சிகளுக்கு என்றென்றும் உறுதுணையாயிருக்கலாம். பெண்களின் ஆரோக்கியம் முழுமையான குடும்பத்தினதும் சமூகத்தினதும் ஆரோக்கியமாகும். நஞ்சற்ற தன்னிறைவான உணவுற்பத்தியை சமூக ஆரோக்கியத்தின் அடிப்படையும் அதனது மேம்பாடும் என உணர்ந்து கொண்டால் அவரவர் உணவுற்பத்தியில் கணிசமான அளவை நாமே உருவாக்கிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுத்துறையில்..

யினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர் உடுத்துறை கடற்பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

8 உரப்பைகளில் ஈரமான நிலையில் போதைப்பொருள் காணப்படுவதால் மேலதிக விசாரணைகளின் பின்னர் போதைப்பொருள் மற்றும் சந்தேக நபர் மருதங்கேணி பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படடுள்ளார். (ம-7,4)

## பதவி நீக்குவதற்..

பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர சமர்ப்பித்திருந்தார்.

இதனடிப்படையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக எவ்வித வாக்குகளும் பதிவாகவில்லை.

தவறான நடத்தை மற்றும் கடுமையான பதவி துஷ்பிரயோகம் காரணமாக அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்காக ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் தனது கருத்துக்களை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் இந்தப் பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். (ம-7,4)

## நாட்டுக்கு...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மகேந்திரனை இலங்கைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு சட்டத் தடைகள் தடையாக இருப்பதாகவும்,

அவரை நாடு கடத்த அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவர் நாட்டிற்குத் திரும்புவதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள் என்று அவர் கூறினார். (ம-7,4)

## அனுமதியின்றி..

சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 20 மாடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூவரசன்குளம் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் லொறி ஒன்றை வழிமறித்து சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது குறித்த லொறியில் அனுமதிப் பத்திரம் இன்றி 20 மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டறியப்பட்டது.

குறித்த வாகனத்தில் இருந்தவர்களைக் கைது செய்த பொலிஸார் 20 மாடுகளையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். குறித்த மாடுகள் மல்லாவிப் பகுதியிலிருந்து குருநாகல் பகுதிக்குக் கொண்டு செல்லப்படவிருந்தன.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,4,250)

## கும்பாபிஷேகத்..

மணி தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்று யாழ்ப்பாணம் சர்வதேச பலாலி விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார். (ம-7,4)

## பயங்கரவாத..

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் ஸ்திரமாகவுள்ளோம். எவ்வாறிருப்பினும் தற்போது சில குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வேறு சட்டமொன்று நாட்டில் இல்லை.

திட்டமிட்ட குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளின்போது சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதே தற்போது நடைமுறையிலுள்ள சட்டமாகும். எனவே பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது எமது விருப்பம் அல்லது விருப்பமின்மைக்கு அப்பால் குற்றங்களைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்படுவதாகும்.

அது நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கமையவே பயன்படுத்தப்படுகிறது. அதற்காக மாத்திரமே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதே அன்றி இதனைத் தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. எனவே இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான முதலாவது சந்தர்ப்பம் கிடைக்கும்போது அப்போதே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குறிப்பாக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய குற்றங்களின்போது இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்றார். (ம-7,4)

## வடக்கு மாகா..

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது ஆசிய அபிவிருத்தி வங்கி இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டதற்கு அமைவாக தொடர்ச்சியாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மாவட்டச் செயலராக வடக்கின் 4 மாவட்டங்களிலும் பணியாற்றிய காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பல திட்டங்களுடன் இணைந்து பணியாற்றியமையை நினைவுகூர்ந்ததுடன் வடக்கு மாகாண மக்களுக்கான உதவிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார். (ம-7,4)

## சி.ஐ..

தந்த குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கைதுக்கான காரணங்கள் ஏதும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. (ம-7,4)

## அரசாங்கம்...

றிய அவர், பாதுகாப்பு துணை அமைச்சரின் அறிக்கை தொடர்பாக பரவும் செய்திகளை நிராகரித்தார்.

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று நாட்டில் உள்ள அனைவரும் விரும்புகிறார்கள். தாக்குதல்களுக்குப் பொறுப் பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என்றார்.

மேலும், இந்த வழக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் (CID) ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள்தான் தொடர்புடைய அறிக்கைகளை வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம-7,4)


மஹஜன சம்பத — திகதி 2025.04.08 — சீட்டிழுப்பு இலக்கம் 5800 — Q 8 3 0 7 4 4
அத சம்பத — Q 0 7 4 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0375

தன நிதானய — திகதி 2025.04.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1830 — V 30 42 67 68 V — 72961

மெகா பவர் — திகதி 08/04/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2148 — G 18 06 63 73 80

ஜய — திகதி 2025.04.08 — சீட்டிழுப்பு இலக்கம் 068 — J 2 0 3 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4042 — சீட்டிழுப்பு திகதி 08.04.2025 — P 24 43 51 73 — P

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.04.08 — சீட்டிழுப்பு இலக்கம் 1109 — மேடம் 01 19 21 46 மேடம் — 79636 — 07

உத்தியோகபூர்வ முடிவுகள் — 08.04.2025 — வெற்றி வாரம் 508 — L 2 4 7 4 3 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,245,394.80 — 82211

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2774 — சீட்டிழுப்பு திகதி 2025.04.08 — செவ்வாய்க்கிழமை — 13 36 68 69 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,546,650.40

சனிதா — திகதி 08.04.2025 — வெற்றி வாரம் 4935 — 26 28 47 50 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,045,339.20 — 59986

சசிரி — வெற்றி வாரம் 660 — சீட்டிழுப்பு திகதி 08.04.2025 — செவ்வாய்க்கிழமை — 09 36 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4486 — சீட்டிழுப்பு திகதி 08.04.2025 — செவ்வாய்க்கிழமை — 13 18 21 40 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,052,006.00 — 266471

கப்ருக — W 29 02 46 50 59 — 1950 — 08.04.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.571,343,880.20

அத கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2600 — சீட்டிழுப்பு திகதி 2025.04.08 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,030,291.20 — 20 35 47 63 P — 249325


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 20 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17.00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

**076 860 2770, 076 987 8617**
**076 935 3971**

(3902)


## தனியார் துறையினருக்கான

# வேதனச் சட்டத்தை திருத்துவதற்கு அனுமதி

தனியார் துறையினருக்கான தேசிய குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் மற்றும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் என்பவற்றை அதிகரிப்பதற்காக தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2025 ஆம் ஆண்டு பாதீட்டின் மூலம் அரச பணியாளர்களின் சம்பள உயர்வுக்கு இணையாக தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் தனியார் துறையினருக்கான மாதாந்த குறைந்தபட்ச சம்பளம் 17,500 ரூபாயிலிருந்து 27,000 ரூபாய் வரை 9,500 ரூபாயினால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன் தேசிய குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 700 ரூபாயிலிருந்து 1,080 ரூபாய் வரை 380 ரூபாயினால் அதிகரிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தொழிலாளர்களுக்கான தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-7,4)


# மணமகன் தேவை

1. நல்லூர், இந்து, 1990, மூலம், Graduate, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
2. யாழ்ப்பாணம், இந்து, 1996, சுவாதி, Masters, Switzerland பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
3. கொக்குவில் - இணுவில், இந்து, 1994, விசாகம், MSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
4. தெல்லிப்பளை - இளவாலை, இந்து, 1993, உத்திரட்டாதி, MBA Graduate பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
5. சித்தங்கேணி - வட்டுக்கோட்டை, இந்து, 1999, கேட்டை, MSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
6. புங்குடுதீவு - சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Graduate, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
7. தம்பசிட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Graduate, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
8. மானிப்பாய், இந்து, 1993, ஆயிலியம், Graduate, AustraliaCitizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
9. சங்கானை - KKS, இந்து, 1998, அத்தம், UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
10. புங்குடுதீவு, இந்து, 1992, பூரம், Graduate, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(1006)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 803 8193

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2651)

**076 825 7716** (ஆகாஸ்)

# அலுவலக துப்பரவு பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் துப்பரவு பணிகள் தினமும் செய்வதற்கு பெண் பணியாளர் தேவை. அருகாமையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : **076 097 3121**

முகாமையாளர் | வலம்புரி

# A/L CHEMISTRY

**2025 Batch Physical Chemistry & Paper Class**

- >பிரிவு 1 MON - FRI 5.30 am - 6.30am
- >பிரிவு 2 MON - FRI 6.00 pm - 7.30 pm
- >2026 Batch 1 - Gases

திரு. S.சுரேஸ்குமார் BSc(Hons) PGDE
**Smart Science Academy**
154A, Navalar Road, Jaffna. 0775 559 028

(3899)

# DCM - யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2027**

கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் – 12.04.2025
(சனி) 8.00 Am
நிர்வாகம் : 077 778 9815
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-2653)

# IELTS - New Batch ஆரம்பம்

12.04.2025 - 4.00Pm

(Academic - General and Life Skill A1)

இத்துடன் Basic & Advance English Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

By : B.MURALI - 077 798 9830

(3900)

# வீடு தேவை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை போன்ற பிரதேசங்களில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வாடகைக்கு வீடு தேவை.
(கார், வான் தரிப்பிடத்திற்கு உகந்த இடம்)

**077 706 4151**

(3901)


# இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் ஞானசேகரம் ஜயந்தன்

எங்களுக்காய் வாழ்ந்த அன்பான உறவே
எங்கள் இருவருடனும் பயணித்த - சுடரே
எம்மை விட்டு இருபதாண்டு - நீ பிரிந்தாலும்
எங்கள் கண்களில் இருந்து இன்றும்
மறையவில்லையண்ணா
எண்ணிலா கனவோடு எங்களோடு
வாழ்ந்தாய்
எங்கள் இருவரையும் நினைத்து நினைத்தே
உருகினாய் - ஆனாலும்
அளவில்லா பற்று வைத்ததை இறைவனும்
பொறுக்காமல்
உன்னை அவசரமாய் அழைத்தது
ஏனென்று தெரியாமலே - கலங்குகிறோம்
உன் நினைவுகள் நீண்டு
சென்றாலும் உந்தன்
தாய், தங்கைகள் இதயத்தில்
வாழ்ந்து கொண்டே இருப்பாய்!

(C-2656)

நீங்கா நினைவுகளுடன் ..... குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

நீர்வேலி சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பின் விலை 12 லட்சம்

தொடர்புகளுக்கு:
**077 820 9424**

(3870)

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2652)

# Accounting Services

உங்கள் நிறுவனத்தின் கணக்குகள், கணக்காய்வு (Accounts and Auditing), நிறுவனத்தின் OR தனிநபரின் வரி கோப்புகளை (Tax Return) சமர்ப்பித்தல் வரி சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்படும்.

Tel Number : 070 150 6222

(3878)

# பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் கல்லு அடிக்கும் யாட் ஒன்றிற்கு மெசின் கல்லு அடிப்பவர், வேலி தூண் போடுதல் போன்ற வேலைகளுக்குரிய பணியாளர் தேவை.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

**077 940 0963**

(1007)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.